[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 28

குவாரி நடத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் சொன்ன கருத்து சரி அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், இப்பொழுது உங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்றுதான் இன்று 9-40 மணிக்கு நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அறிக்கையை வாங்கி, உங்களுக்கு, சபை மூலமாக, உங்களை மரியாதைப்படுத்தும் வகையில்தான் இவ்வளவு தூரம் பதிலை உங்களுக்குச் சொல்லியிருக்கிறார். பதில் சொன்னதற்குப் பின்னர் திரும்பத் திரும்ப நீங்கள் அதன் மீது கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தால் உங்களுக்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) இப்படியெல்லாம் நீங்கள் செய்ய முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோரல் என்ற முறையில்தான் கேட்டீர்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) அதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலைச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்.*

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படையினரால் நம்முடைய மீனவர்களுடைய படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு, விடுவிக்கப்படாத நிலையில், மீனவர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். அவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.*